**// பதிவு தபால் ஒப்புதலுடன் //**

பேரூராட்சி அலுவலகம்
ஆரல்வாய்மொழி.

ந.க.எண்:542/2022/அ1 நாள்: 23.06.2022

## <u>ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு</u>
## (இரண்டு உறைகள் முறை)

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022 ன்கீழ் கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து ISO/ISI மூடி முத்திரையிட்ட தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 12.07.2022-ம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும். வரப்பெற்ற தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் 12.07.2022-ம் தேதி செவ்வாய் கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 11.07.2022-ம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பட்டியலில் கண்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது உடன் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட நாள் விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு அடுத்து வரும் வேலைநாளில் பெற்றுக்கொள்ளப்படும். மேலும், ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்றுக் கொள்ளும் போது எந்த வேலைக்காக பெறப்படுகிறதோ அந்த வேலைக்கான படிவ தொகை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் https://tenders.tn.gov.in மற்றும் http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இருந்து கிரையமின்றி பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

### <u>நிபந்தனைகள்</u>

1. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக் குழுவில் மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.
4. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக் குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் அளித்த பின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.
5. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும்.
6. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப் பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி மற்றும் சரக்கு சேவை வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு (2019-20, 2020-21 மற்றும் 2021 - 22) குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனை வரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும்.
11. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி. 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
12. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புத் தொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.
13. செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.

15. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தக்காரர், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

2. டேவணித் தொகைக்கான வங்கி வரைவோலை, முன் அனுபவச் சான்றிதழ், நிதி நிலை அறிக்கை, சரக்கு மற்றும் சேவை வரி / வருமான வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் (உறை 1) வைத்து, உறையின் வெளிப்புறத்தில் “Technical Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

3. மற்றொரு உறையில் (உறை 2) பூர்த்தி செய்யப்பட்ட விலை ஒப்பந்த புள்ளி படிவம் வைத்து “Price Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை ( உறை 1) பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே “Price Bid” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை (உறை 2) திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியானதாக இல்லையெனில் “Price Bid” உறை திறக்கப்பட மாட்டாது.

விநியோகஸ்தர் கடந்த 3 ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் மேற்கண்ட வேலையின் மதிப்பீட்டுத் தொகை போல மொத்தப் பணிகள் 50% குறையாமலும் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் மேற்காணும் வேலையில் கண்டுள்ள பணி போன்று ஒன்றினை மதிப்பீட்டைப் போல் 50% மடங்கு பணி செய்து முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். இதுபோன்ற முன்அனுபவ சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

4. பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான இயந்திரங்கள் சொந்தமாகவோ (அல்லது) வாடகைக்கு வைத்துள்ள ஒப்பந்ததாரர்கள் அதற்கான ஆவணங்களுடன் Technical Bid என்ற உறையில் இணைத்திருக்க வேண்டும்.

**<u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022</u>**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | டேவணித் தொகை | ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலை | விநியோகம் செய்யப்பட்ட காலம் |
|---|---|---|---|---|---|
| 1, | மின்கலன் மூலம் இயங்கும் 14 வாகனங்கள் (BOV) விநியோகம் செய்தல் | 21.70 | 21,700/- | 15600/- | 30 நாட்கள் |

செயல் அலுவலர்,
ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி.

**பெறுநர்**

பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

**நகல்.**

1. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சி, நாகர்கோயில் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது
2. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், நாகர்கோயில் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
3. ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகள்.
4. இளநிலை பொறியாளர், பேரூராட்சி, ஆரல்வாய்மொழி.
5. கிராம அலுவலகம், ஆரல்வாய்மொழி.
6. தலைவர் ஆரல்வாய்மொழி பேரூராட்சி.
7. அலுவலக விளம்பர பலகை.